இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1998 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம்

(1998, யூலை மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1998, யூலை மாதம் 31 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.00 தபாற் செலவு : ரூபா 2.50

# 1998 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. – ஓ. 26/97

## குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். கருக்கப் பெயர்.

2. 1993 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 45 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :– 351 ஆம் அத்தியாயத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "குற்றத்தீர்ப்பளிக் கப்பட்டதன்மேல்" என்னும் சொற்களில் தொடங்கி அப்பிரிவு முடியும் வரையிலுள்ள சொற்களுக்குப் பதிலாக, "(அ) என்னும் பந்தியின் அல்லது (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின் அல்லது (ஈ) என்னும் பந்தியின் அல்லது (உ) என்னும் பந்தியின் அல்லது (ஊ) என்னும் பந்தியின் அல்லது (எ) என்னும் பந்தியின் கீழான ஒரு தவறின் விடயத்தில் ஓராண்டிற்குக் குறையாததும் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலத்திற்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கும் அத்துடன் ஐம்பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாததும் இரண்டு லட்சம் ரூபாவிற்கு மேற்படாததுமான ஒரு குற்றப்பணத்திற்கும் அத்துடன் (ஏ) என்னும் பந்தியின் அல்லது (ஐ) என்னும் பந்தியின் அல்லது (ஒ) என்னும் பந்தியின் அல்லது (ஓ) என்னும் பந்தியின் அல்லது (ஔ) என்னும் பந்தியின் அல்லது (க) என்னும் பந்தியின் அல்லது (ங) என்னும் பந்தியின் அல்லது (ச) என்னும் பந்தியின் கீழான தவறொன்றின் விடயத்தில் ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியற் றண்டனைக்கும் அத்துடன் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்படா ததுமானதொரு குற்றப்பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும் ;

2—ஜ—048939—1,100 (98/05)

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :–

"(6) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் எது எப்படி இருப்பினும், ஒராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் தவறுக்கு ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நீதிமன்றத்தின் முன்னர் –

(அ) குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு ஆளின் விடயத்தில் அச்சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது ;

(ஆ) குற்றவாளியென ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது குற்றவாளியெனக் காணப்பட்ட ஒரு ஆளின் விடயத்தில் அச்சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளை நீக்கஞ்செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

"(அ) நாற்பத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் அல்லது (ஆ) என்னும் பந்தியின் அல்லது (இ) என்னும் பந்தியின் அல்லது (ஈ) என்னும் பந்தியின் அல்லது (உ) என்னும் பந்தியின் அல்லது (ஊ) என்னும் பந்தியின் அல்லது (எ) என்னும் பந்தியின் கீழான ஒவ்வொரு தவறும்.

(ஆ) நாற்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான ஒவ்வொரு தவறும், அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கு அல்லது (ஆ) என்னும் பந்திக்கு அல்லது (இ) என்னும் பந்திக்கு அல்லது (ஈ) என்னும் பந்திக்கு அல்லது (உ) என்னும் பந்திக்கு அல்லது (ஊ) என்னும் பந்திக்கு அல்லது (எ) என்னும் பந்திக்கு அது தொடர்புள்ள தாயுள்ள அளவுக்கு".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா: (உள்நாட்டு) ரூபா 1,387; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.